26
தஞ்சையின் முதல் சுதந்திரப் போராட்டம்

கூசாவளநாடு கீழ் வேங்கைப்புலியூர் கள்ளர் அந்த முந்திரித்தோப்பு மைதானத்தில் கூடிக் குழுமியிருந்தார்கள். எள் சப்தம் இல்லாத குசுகுசுப்பும் முணுகலும் தான் எழும்பிக் கொண்டிருந்தது. இரவு நிசிநேரம் இரண்டாம் யாமம் சுளுந்துகள் விளக்கெண்ணை புகை கக்கியபடி முந்திரி மரங்களில் பிசாசுபோல் மரங்களைத் தலைவிரிகாட்டி பயந்து கொண்டிருந்தன. மழை வேறு சிணுக்குத் தூறல் வீசுவதும் நிற்பதுமாய் நனைப்பதும் உலர்த்துவதுமாய் கள்ளர்களின் உடல் வெப்பம் கனன்று நெஞ்சத்து அதிர்வினை அதிகப்படுத்தியது. இருட்டின் கனிந்த சுளுந்து வெளிச்சத்தில் கரிய திடகாத்திர உருவங்கள் சவுக்கண்டியைச் சுற்றிலும் அசைவதும் நகர்வதுமாய் இருந்தன. முந்திரி மரங்களின் இடுக்கிலிருந்தும் பின்னிருந்தும் இருளில் தீக்கங்கு விழிகளுடன் உரத்தநாடு மேலக்கண்ணந்தக்குடிகாடு கண்டப்பிள்ளைகளும் கரமுண்டான்களும் மழவராயன்களும் கூட்டம் கூட்டமாய் நின்று குசுகுசுத்து உறுமினர். எங்கும் வியர்வையின் சாராயநெடி! மேனிகள் பளபளக்க வரிசை வரிசையான வேல்கம்புடன் நின்று கொண்டிருந்த அந்த கள்ளர் நாட்டு வீர இளைஞர்களுக்கு வாழக்காரணம் வேண்டும்! அழிமதியிலிருந்து தப்ப வேண்டும். தர்மத் தினைக் காக்க வேண்டும். அதுதான் அந்த முணுமுணுப்பும் விறைப்பும்.

''எலா! என்னடா அங்க சத்தம் குடுத்த பயலுவளா! சத்தம் எதுக்கு போடுறிய? இன்னும் சத்த நேரத்துல ராசா வந்துடுவாரு! மூச்சுப் பறியப்படாதுலா! ஆம்மா'' என்றார் விருமித்தி ஆதிரியார். ஆறடி உயரம் பளபளவென்ற எண்ணையில் மதுரைவீரன் போல உடம்பும் வேல்கம்பைவிட உயரமான அவர் தோற்றம் அவர் பக்கத்திலேயே அவரது மகள் ஆயிமங்களம்மா நின்றாள். வில் போன்ற உடல். இடுப்பில் சூரிக்கத்தி வரிந்து கட்டிய கண்டாங்கி. கழுத்தில் கண்டட்டி. காதில் பவுன் ஓலைக்குத்து தட்டு மினுங்கி குலுங்கியது. நிமிர்ந்து நிற்கும் முரட்டு மார்புகள்தான் அவளைப் பெண் என்பதனை நினைவூட்டின. தொடைகளின் பருமன் கால்களின் உறுதியும் நின்ற நிற்பும் ஆச்சர்யம் தரும் காளி!

கூட்டத்தில் முணுமுணுப்பும் அடங்கியது. சேண்டப்பிரியர் கேட்டார் - ''எம்மாப்ளெ ஏதுக்காவ எல்லாரையும் கூட்டியிருக்கிய? ஏதாவது ஆபத்தா? என்ன சங்கதி? மூவாயிரம் பேரும் போதுமா? வேங்கை கள்ளனுவளும் வேணுமா? ஒண்ணுமே சொல்லாம இருந்தா என்ன ஆறது? பயம்மா இருக்கா மாப்ள? ஆவத்து நமக்கு புதுசா? சாவுறதுக்குத்தாந் பொறந்தோம்! ஒங்களுக்கு வயசு எம்ளது ஆவுது மாப்ள? இன்னமும் கருவான் நல்லெண்ணச் சோறும்

கொத்துபுளியும் ஜெரிக்குது உங்களுக்கு! நம்ம ஜாதிசனம் அழியிறதெ பாத்துகிட்டு இருப்பியளா மாப்ள?'' என்றார் விருமித்தி ஆதிரியார்!

''பயம் என்ன மாப்ளெ? எங்க தலைக்கட்டு கள்ளனுவ எல்லா பயலையும் அளைச்சாந்திருக்கேனாக்கும்! எவன் உங்கமேல கை வெய்ய முடியும்? பாத்து புடுவோமன்னேன். நீங்க விசயத்தெப் புட்டு வைங்க மாப்ள'' ''அப்பாரு எப்பயும் இப்படித்தான் சொல்லவும் மாட்டாரு முழுங்கவும் மாட்டாரு? நெலமை முத்துன அப்புறம்தான் பேச்சே!'' என்றாள் ஆயி.

அதில்லெ மாப்ளெ! இப்ப செத்த நாளாத்தான் நம்ம ஊரு ஆடு எல்லாம் அடங்கியிருக்கு! இல்லியா? வரி வரின்னு துலுக்கர் வந்து புடுங்கிட்டுப் போனானுவ. அப்புறமா நாய்க்கனுவ தெலுங்குல பேசிட்டு வந்து கிஸ்திவாங்கினானுவ! அப்றம் இப்ப மிராட்டியனுவனும் வந்து நம்மகிட்ட வரிவாய்தா போட்டு புடுங்கி எடுக்குறானுவ, அதுமட்டுமல்லெ மாப்ளெ! இப்ப கிட்டனுசுல டச்சுக்காரனுவ பறங்கி தலையனுவ போர்ச்சுகீசியனுவ நெருப்பு துப்பாக்கியோட வெள்ளைக்காரனுவ ப்ரெஞ்சுக்காரனுவ டேணிஷ்காரனுவ, தஞ்சாவூர்ல இருந்து சாரட்ல வர்றான். காசு பணம்ன்னு உயிரெ வாங்குறான். நடூர் பொண்ணுவளெ கொண்டு போய்டது துலுக்கன்! கள்ளனுவ பூச்சி செத்து மடியிறதுபோல செத்தானுவ தொரத்திகிட்டு போன மழவராயனுவளெ மண்ணாத்தா கோயிலடி முத்தத்துல வெட்டி வெட்டி கூம்பாராம் போட்டானுவ ராயணுவ! என்ன பண்ண முடிஞ்சு? வெள்ளக்காரன் குருவிசுட வந்து கண்ணந்தங்குடி வடுவூரு ஏரியில ஆட்டம் போட்டானுவ! என்ன ஆச்சு? மூணுமாசத்துக்குள்ள வெளஞ்சதை எல்லாம் குடுத்துட்டு ஊட்டு உள்ள படுத்துகிட்டு வெளக்கெண்ணைய வாழலயில பூசி நெய் வடிய சாப்ட மாதிரி வீதியில வீசுன கெப்புறுள்ள கள்ளச்சிவளெ இன்னும்தான் தொரத்துறானுவ! இனிமே என்ன செய்யறது மாப்ள?''

''தெரியாமியா கெடக்கு இதெல்லாம் ஏஞ்சொல்றிய மாப்புள? ஏன் ஆயுசுக்கு நாம் பாக்காததா? தடி எடுத்தவன் எல்லாம் பணம் கேக்க வர்றான். யாரு ராசான்னு யாருக்குத் தெரியுது? கள்ளக்குடிவதான் பவுஞ்சுபவுஞ்சா சாகுது! நாய்க்கரு படையில சண்டைக்கி நின்னவன்லாம் ஆரு? கள்ளன்லாமெ ஆராம்? துலுக்கன் படையில முன்ன நெஞ்ச நிமித்திகிட்டு சண்டைக்கி போனவன்லாம் ஆரு? அட தரங்கம்பாடி டேனிஷ் பரங்கியனுவக் கிட்ட வேலை எடுத்தவன்லாம் யாரு? நம்ப ஈச நாட்டுக் கள்ளனுவதானே? அட வெள்ளக்காரனுவகிட்டியும் நம்ம கள்ளப்பயலுவதான வேளைக்கி வேள சாவுறதுக்கு பீரங்கி முன்னால போனவன் எல்லாம் நம்ம பயலுவ நம்ம பயலுவளையே வெட்டிகிட்டு செத்தான்? இதெல்லாம் ஏன் நடக்குது மாப்புள?'' என்றார் சேண்டப்பிரியர் மூச்சு இரைத்தது அவருக்கு.

''வேற என்ன செய்ய முடியும் மாப்புள? முன்னூறு வருஷமா கள்ளனுவளுக்கு வேலையில்லாமல் போச்சு! நான் எட்டு வயசுல பயலா இருந்தப்பவே நம்ப தலக்கட்டு எல்லாம் ஒடஞ்சு செதறிப்போச்சு. கள்ளனுவ அவனுவளுக்குள்ளயே வெட்டிகிட்டு எப்ப சாவலியாம்? சோழராஜா கிட்ட

பெருமியா விருத்தியா இருந்த கள்ளனுவ இப்ப சோத்துக்கு கூலியா - எல்லா நாயிகிட்டயும் போயி சண்டைக்கி போறேன் காவலுக்குப் போறேன்னுட்டு நாறப்பயபுள்ளைவ குடி அழிய தன்னத்தானே அழிமதி செய்யுதுல. கண்டரக்கோட்டை திருமக்கோட்டை மன்னார்குடி வீரராம் பட்டணம் எல்லாம் சப்ஜாடா நாயக்கன் படை அழிஞ்சப்போ கள்ளனுவதான் அழிஞ்சான். நாயக்கனுவ செயிச்சான்னா - கள்ளந்தான் பலி! மிராட்டியனுவ செயிச்சாலும் சாவக்குடுத்தடிக்க கள்ளந்தான். மீதியா சண்டையில சுளுந்து கொளுத்திகிட்டு நின்னான். இப்ப வெள்ளப் பறங்கியாங்கிட்டியும் நம்ம கள்ளத்தாயழியதான் நிக்கிது!''

''ஒண்ணும் புரியிலிய மாப்புள! என்னா சொல்லவாரிய? எனக்கு தலையும் புரியிலெ வாலும் புரியலெ!'' என்றார் ஆதிரியார்.

''தஞ்சாவூர்ல! இப்ப பத்து வருசமாத்தான் ராசான்னு உக்காந்து ஆள்றாரு. இப்ப பத்து வருசமாத்தான் நம்ப புள்ள குட்டிவ அமச்சலா பொளைக்கிதுவ; ஏதோ வெதப்பாட்டுக்கு அறுவடை பண்ணுதுவ! கும்பி கழுவுதுவ. அதெக் கெடுக்க வந்துட்டான் வெள்ளப் பறங்கிப் பயலுவ! அமர்சிங்கு மஹாராஜா வந்து ஒக்காந்தப்பறம்தான் கொஞ்சம் நிம்மதி! ஆனா நவாப் பட்டணத்துல வெள்ளைப் பறங்கியனுவளும் - தரங்கம்பாடியில டச்சு பயலுவளும் காரைக்கால்பக்கம் பொறையாறுல ப்ரெஞ்சு நாய்வளும் கள்ளனுவளெ சேத்துகிட்டு நம்மளையே செயிச்சுப் போடவாறான்! தெரியும்ல்ல? இனிமே என்னா செய்யறது?'' என்றார் விருமித்தி.

நாலாபுறமும் நடக்க ஆரம்பித்தார் அமர்சிங்! கூடவே சுருண்ட பணிவுடன் நடந்தனர் ஆதிரியாரும் மழவராயரும் கண்டப்பிள்ளையும். பந்தங்கள் பூதங்கள்போல இருளில் நிழல்களிடையே வேல்கம்புடன் நின்ற பெண்களும் அமர்சிங் மஹாராஜாவுக்கு மன ஆறுதலைத் தந்தன.

''ஆதிரி! வெள்ளக்காரன் எனக்கு புதுசு இல்லெ! துப்பாக்கியும் பீரங்கியும்கூட புதுசு இல்லை! நீங்க எல்லாம் ஒண்ணு சேரவே மாட்டேங்கிறீங்க! பத்து வருஷம் தஞ்சாவூர்ல எல்லா பக்கமும் ஒத்துபாக்க அனுப்பிச்சிருக்கேன். புதுக்கோட்டை கள்ளனுவ பயப்புடுறான்! கண்டரக்கோட்டையில எவனும் வரத்தயாரில்ல. அட்டோட்டை சொன்ற கோட்டை தேவிப்பட்டிணம் எல்லாம் ஒண்ணாக்க பத்து வருஷம் ஆயிருக்கு. இன்னமும் முத்துப்பேட்டை, காடன்மலை, பிரான்மலை எல்லாம் மதுரை துலுக்கனுவளுக்கு சுருண்டு கெடக்கு! எல்லாருக்கும் பயம் மழவராயரே பயம்!'' என்றார் அமர்சிங்கு!

கலகலவென்று சிரித்தார் மழவராயர். ''பயம்! பரம்பரையிலேயே இல்லங்க மஹாராஜா! ஆறடி ஒசரத்துல வடுவப்பயலுவ வந்தப்ப பயந்தமா? எங்க பொண்டுவள நாங்களே போர் போட்டு எரிச்சுவுட்டு கரைஏத்துனமே - பயந்தா போய்ட்டோம். துலுக்கப் பட்டாளம் வந்துதே அப்பவும் பயந்தோமா? கள்ளசனம் தான் அம்பாரமா செத்துது சண்டையில! ஒங்க அப்பா பாட்டன் காலத்துலயும் கள்ளனுவதான் எய்த்து நின்னான்... இல்லங்க முடியுமா?''

''ஆரு இல்லன்னு சொல்றாங்க. ஆனால் வீணா செத்து ஒழிஞ்சீங்க! நாலு கள்ளனுவ சேந்தா சண்டைதான்! எதுக்குன்னு தெரியாது. நாயக்கனுக்கும் துலுக்கனுக்கும் இப்ப வெள்ளைப் பறங்கியனுவளுக்கும் எந்த வித்தியாசமு மில்லாம துணை நிக்கிறான்'' என்று கூவினார் அமர்சிங் ராசா!

''அப்டி சொல்லாதிய! மஹாராஜா! சேந்தவங்களுக்குத்தான் கள்ளன் துணை!'' என்றார் மழவராயர். கள்ளக்குடிக்கி இல்லெ சாமியாரும்!

''மத்த ஜாதிக்காரன்கிட்ட கள்ளன் எப்டி ஆதிரி! நாலு கள்ளன் ஒண்ணா தெறண்டா ஒத்துப் போறதேயில்லெ. வேற ஜாதிக்காரன் அதிகம் வந்தா எல்லா மறவனும் மூச்சு விட்றதில்லை! எனக்குப் புரியும். கூட்டத்துலதான் கள்ளன் மறவன்ல்லாம்! தனியானா பயம்! ஒதுக்கம்'' என்றார் அமர்சிங்.

கள்ளர்களின் கண்கள் தீ பற்றின. எங்கும் உறுமல் பொறுமல்!

''இப்ப சொல்லுங்க சண்டைக்கிப் போவம்! சாவம் மஹாராஜா'' என்றாள் ஆயி! அவள் உதடுகள் துடித்தன. கூந்தல் அவிழ்ந்து தொங்கியது. மார்புகள் விம்மின! பெருமூச்சு சீறியது! கண்கள் தீப்பொறி உடைத்தது.

''தஞ்சாவூர்ல அரமனையிலியே வெள்ளக்கார ஏஜெண்டெ வெச்சிருக்கீங்க. வெள்ளப்பறங்கிதான் ஒங்களெ ராசாவாக்கி ஒக்காத்தி வெச்சிருக்கான். தஞ்சாவூர்ல இப்பதான் அமைச்சலா ஜனம் பொளைக்கிது நீங்க சத்தரம் கட்டினியோ! சாவுடி கட்டினியோ. தர்மம் பண்ணினியோ. ஆனா இப்ப வெள்ளக்காரன் வாண்டாம்ன்னா என்ன ஆவும் ராஜா!'' மழவராயர் குரலில் ஏனோ ஒரு நடுக்கமில்லாத வறட்சி!

''அரமனைக்குள்ளயே வெள்ளக்காரன வெச்சிக்கிட்டு நீங்க என்ன பண்ண. கவரநாய்க்கரு காலத்துல அரமணைக்குள்ளயே தீ வளத்து எல்லாம் உளுந்து செத்துதுவளே. மஹாராஜா தொளஜா மஹாராஜாவெ பாதாளத்துல காரக்கிருகத்துல அடச்ச வெள்ளக்காரனெ யாரு என்ன செஞ்சீங்க! சென்னப்பட்டனத்துக்கும் கலுகத்தாவிக்குமா அலஞ்சு வாங்கினியா இந்த ராசாங்கத்தெ! தெரியும்! கள்ளனுவ ராஜ்யம் அப்டியில்லெ!'' என்றார் விருமித்தி ஆதிரி. அதற்குள் முந்திரிமரங்கள் உலைந்தன.

''டேய் புடிங்கடா கல்லாசு! உடாதெ'' என்று அலறினார் மழவராயர்! முந்திரி மரங்களிடையே கிளைகள் முறிபட்டன. செம்மண் புழுதி வானளாவ எழும்பியது! சற்று நேரத்தில் சுற்றுவட்டாக சங்கிலி இரும்பு கயிற்றில் கட்டிய நாலு வெள்ளை சிப்பாய்கள் கள்ளக்குடி இளைஞர்களால் சுற்று வட்டாக கட்டி இழுத்து வரப்பட்டார்கள். ஆ!

ராமேச்வரம் போகிற சாலையில் குதிரைகளின் குளம்படோசையும் சாரட்டு வண்டியின் கிறிச்சிடும் வார்கோலின் சொடுக்கும் ஹேஹே என்ற கொத்தவால்களின் சப்தமும் மருந்து பூசிய பந்தங்கள் ஒளிவீச எரிந்த வெளிச்சமும் அந்த இடத்தை சுற்றி வந்தது. ஏராளமான கள்ளர்குடி இளைஞர்கள் எண்ணை பூசிய உடல்கள் மினுமினுக்க தனி சாரட்டில் நீண்ட பதினைந்து குதிரைகள் வரிசையாக இழுக்க முந்திரி தோப்புக்குள் வந்து நுரை கக்க குதிரைகள் குளம்பொலி திமிற நின்றன.

பேஷ்வாக்கள் ஆறடி கத்திகளுடன் உருவிய பளபளப்பு காட்டியபடி முன் கதவைத் திறக்கவும் வில் வெட்டு மெத்தையிலிருந்து இறங்கினார் அமர்சிங் மஹாராஜா! கண் கவரும் சிவப்பு நிறம் கரிய நீண்ட தலைமுடி அற்புதமான தலைபாகை! நீலநிற அற்புதமான கண்கள் இருட்டிலும் எச்சரிக்கையுடன் சுழன்றன. நல்ல உயரம்! பிசாசு போல் எரிந்து கொண்டிருந்த கந்தகப் பொடி தட்டுகள். அதை தலையில் தாங்கிய அடிமைப்பெண்கள்! கும்பல் கும்பலாய் இருளில் சித்திரம் வரைந்த காற்றில் ஆடும் முந்திரிக் கூம்பாரங்கள்.

சாஸ்டாங்கமாக விழுந்து கும்பிடப்போன விருமித்தி ஆதிரியாரைத் தழுவி எதிர்த்தார் பேஷ்கார் - சிந்திய காடேகர்!

''ஓங்க எல்லாரையும் பாக்கறதுல சந்தோஷம் மஹாராஜாவுக்கு. எல்லாரும் வந்தாச்சா?'' என்றார் கோல்கர் ராவ்ஜி! இன்னொரு தாலுக்தாரர்.

ஆதிரியார் விருமித்தி அடக்கத்துடன் நின்றார். எங்கும் ஆழ்ந்த அமைதி. கந்தக வாடை சுழுத்துப்பந்தத்தின் விளக்கெண்ணை கசப்பும் வீசியது.

''எத்தினி பேர் இருக்கீங்க?'' என்றார் அமர்சிங் மஹாராஜா

''மூவாயிரம் பேர் இருக்கோம் மஹாராஜா. ஆனா...'' என்றார் மழவராயர்.
''என்ன சந்தேகம் மழவராயரே? கியாதத்கீர்?'' என்றார் அமர்சிங்.

''ஒண்ணுமில்லிங்க மஹாராஜா வெள்ளப்பறங்கினுவளெ எதுத்துகிட்டு பொளைக்க முடியுமா? உங்களுக்கு தெரியாதா? வெள்ளக்காரன் பல மிலேச்சசாதியா நம்மைச் சுத்தி மெறிச்சிகிட்டு நிக்கிறான் தஞ்சாவூர்ல - திருவாரூர்ல நாவப்பட்டணத்துல - பொறையாரு தரங்கம்பாடி காரைக்கால் பாண்டி எல்லா எடத்திலியும் துப்பாக்கியும் பீரங்கியுமா சேத்துகிட்டு வெள்ளக்காரன் அம்ப கள்ளனுவளை தயார் பண்ணி படை பொறட்டி அடிக்கிறான். ஓங்க சித்தப்பாரு அப்பா காலத்துல என்னா நடந்தது? மஹாராஜா பவுஞ்சு பவுஞ்சா கள்ளனுவ செத்தானுவ. ஒத்தனெ ஒத்தென் வெட்டிகிட்டு உளுந்து செத்தான். நாக்கிரு ராசா காலத்துலயும் செஞ்சிக் கோட்டையே எரிச்சான் கிருஷ்ணப்பநாக்கிரு. திம்மப்ப நாகிரு காலத்ல இருந்து துலுக்க பட்டாணிவ வந்து சூரையாடுன காலத்துலயும் நாங்கதான் செத்தோம் மஹாராசா! இப்ப நீங்க வெள்ளக்கார ராணுவத்த எதுத்து நிக்க என்ன இருக்கு. காலமே குப்புறப் புரண்டுகிச்சு! இப்ப நாலஞ்சு வருஷமாத்தான் புள்ள குட்டியளோட சந்தோஷமாகி நிக்கிறோம், சாப்புடுறோம், வெள்ளப் பறங்கியனுவளுக்கு தேவிப்பட்டணத்துக்கு இப்பயே சேதி போய்ட்டு அங்கியும் கள்ளந்தான் நிமித்திகிட்டு நிக்கிதான் மஹாராசா. இனிமேல்ட்டு வெள்ளக்காரனெ எதுக்க முடியாது. புதுக்கோட்டை முத்துப்பேட்டை எல்லாம் உளுந்துட்டு மஹாராசா! எனக்கும் வயசு தொண்ணூறுக்கு மேல ஆச்சு! பாக்காததெல்லாம் பாத்தாச்சு. மராட்டிய ராசா வந்தப்புறம் எங்களுக்கு நெறைய செஞ்சிருக்கீங்க. ஆனா வெள்ளைக்காரன் பீரங்கி.''

''என்னா பீரங்கி! சதாராவுக்கும் கோல்ஹாப்பூருக்கும் ஆளு தூது பெய்ருக்கு ஆதிரி! பாண்டிக்கும் ப்ரெஞ்சுக்காரனுக்கும் சமாதானம். ஆயிரம் பகோடா தாரதா சொல்லி ஆளும் அனுப்பியிருக்கோம். நம்ப படையும்

திருவிடைமருதூர்ல கபர்தார் துளஜா மஹாராஜா இதே வெள்ளக்காரனை ஓடஓட வெரட்டிலியா என்ன? இங்கிருக்கிற எல்லாருக்கும் விசுவாசம் வர்ணும். எல்லா கள்ளனும் ஒண்ணா தெறளனும் ஆதிரி! ராமநாதபுரத்துக் கபர் குடுத்திருக்கு ராஜா இனிமே பொறுக்க முடியாது! பாளையப்பட்டு கம்மவாரி நாயக்கன்களும் வந்தாச்சின்னா கல்கத்தா வரைக்கும் பறங்கியனுவளை தெரத்தித்தெரத்தி அடிப்பேன். எனக்கு வேண்டியதெல்லாம் மறவனுகளோட உதவியும் சண்டையில் துணையும்தான்'' என்று உறுமினார் அமர்சிங். குடுமியை அவிழ்த்து உதறினார் ஆதிரியார். கூட்டத்துல பொருமலும் அமளியும்.

வேவுகார சிப்பாயிகள்! முகத்தைப் பார்த்ததுமே சொல்லி விடலாம். போர்த்துகேய சிப்பாயிகள்! ''ஹூ ஆர் யூ? ராஸ்கல்ஸ் ஹூ செண்ட் யூ!?'' என்றார் அமர்சிங்! நால்வரும் பரிசிலித்து அவிழ்த்து முண்டமாக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டபோது ஒருவன் சொன்னான் ''யுவர் ஹைன்ஸ்! வி ஆர் செண்ட்பை த கல்கத்தா ப்ரெவின்ஸியல் ரீஜன்ட் த்ரூ ஹிஸ் மெஜஸ்ட்டி மெட்றாஸ்! கவர்னர் ஹான். ஆர்ச் பால்ட் காம்பல்'' என்றான் மற்ற சிப்பாய்! மறு நிமிடம் நான்கு சடலங்கள் ஒத்த வெள்ளத்தில் விழுந்தன. ஒருவன் உயிர்போகும் நேரத்தில் சொன்னான் ''வீ ஹவ் செண்ட் இன்வர் மே ஷன்றா கவனர்!'' கொத்தவால் கரங்களில் விளையாடிய ஆறடி வாள் மீண்டும் நெஞ்சில் இறங்க மன்னர் கண்கள் சிவக்க சிரித்தார். கள்ளர் கும்பல் அலைமோதியது. பெண் மறத்திகள் குலவையிட்டார்கள்!

''இதே காம்பல் துரைதான் என்னை தஞ்சாவூர் ப்ராவின்ஸிக்கு ராஜா ஆக்கினான். அவனே வேவு பார்த்து கழுத்துக்கு கத்திவிட்டிருக்கான்! மழவராயா! நீங்க ஒண்ணு சேந்தா ராமநாதபுரம் ராஜாவும் முத்துப்பேட்டை ஜமீனும் ஒண்ணு சேந்துடும். துளஜா மஹாராஜா? முஸ்லீம் பட்டாளத்தையும் ஹைதரையும் தேவிப்பட்டணத்திலும் நவாப்பையும் சந்தாசாய்ப்பையும் தெரத்தி அடிச்சு ஓட்டலியா? எப்டி இருந்தாலும் வெள்ளக்காரன் சுத்தி சுத்தி எங்களை வேட்டு தீத்துகிட்டே வர்றான்! பத்து வருஷம் தாக்கு பிடிச்சாச்சு மழவராயரே! தஞ்சாவூர்ல ப்ரெஞ்சுக்காரனும் துலுக்கனும் துரானியனும் மொகம் தெரியாத மிலேச்சனுவளும் அலையிறாங்க! ஜனங்க பயத்ல கதவெத் தெறக்காம மூடிக்கிறாங்க. அரண்மனைக்குள்ளயே போர்ச்சுகீஸ்ய வேவுகாரன்கள் அலையறான். பள்ளிக்கூடம் வித்யாசாலா சத்தரம் எல்லாம் தர்மசாலையா நடக்குது. சோத்துக்கு ஜனம் அஞ்ச நிக்கிதுக! ஆனா காரைக்கால்ல பீரங்கி நமக்கு வரனும் - நந்திதுர்க்கத்ல இருந்தும் கர்நாடக, மலபார்ல இருந்தும் துருப்புகள் வரணும் - துப்பாக்கி வரணும் எல்லாத்துக்கும் மேல கள்ளனுக ஒண்ணுசேரணும். வெள்ளக்காரன் நம்மெ முழுங்கி நக்குறதுக்கு முன்னால நாம அவனெ வேட்டு தீக்கணும்.''

''மாசமாசம் திதிக்கு திதி பணம் கேட்டு நம்பளெ மொடக்குறான். நடிச்சிகிட்டு கம்பனிகாரனுக்கும் வெள்ளப் பறங்கிகளுக்கும் சிநேகிதனா நடிச்சுகிட்டே சாகணுமா விருமித்தி ஆதிரியாரே! சொல்லும்''

மன்னரின் கதறல் திகில் ஊட்டியது. செத்துப் புரண்டு கிடக்கும் சவங்களை நிமிடத்தில் இல்லாதாக்கினர் கள்ளர்குடி இளைஞர்கள்.

குடுமியை மேலேற்றி முடிந்தார் விருமித்தி. ஆதிரியார் கண்கள் ஏறி சிவந்தன. நரைத்த முடி சுருள்கள் நிரம்பிய அவரது மார்பு விம்மியது.

''மஹாராஜா! ஆறாயிரம் தலக்கெட்டா இருந்த நம்ம நாட்டுக் கள்ளக்குடி ஊருக்கு சேவுகம் செஞ்சு உசிர்வுட்டே முன்னூறு தலக்கெட்டா ஆயிப்போனது உங்களுக்கு தெரியாதுல! வடுக ஜனம் வந்தப்போ மடங்கமாட்டேன்னு செத்தது ஏராளம். அப்பறம் எந்த வடுக ஜனத்துக்கு எதுத்து நின்னானோ, அதே வடுக ஜனத்துகிட்டேயே போயி சண்டைக்கி ஆளு சேத்தப்போ சேனையில போயி சேந்தோம். தெலுங்கனுவளாவது ஆளுவானுவன்னு ராமநாதபுரம் தேவிப்பட்டிணம் மஹாதேவ பட்டணம் எல்லாம் கள்ளனுவ வடுகனுவளுக்கு தொணையா நின்னு சண்டை போட்டோம். ஆனா என்ன ஆச்சு? துலுக்கனும் நவாப்பும் வந்து வடக்க இருந்தும் தெக்கயிருந்தும் லட்சக்கணக்குல கள்ளனுவளோட சண்டை போட முடியாம ஓடுனானுவளா? ஒங்க மிராட்டியங்க வந்தப்போ திரும்பியும் வடுவ சனம் நெருப்புல பொசுங்கி மன்னர் கோட்டையிலும் மஹாதேவபட்டண கோட்டையிலயும் கொளுத்திகிட்டு வெள்ளக்காரனுக்கும் துலுக்கனுக்கும் ஈடுகுடுக்க முடியாம அழிஞ்சுதவ! அப்பவும் கள்ளன்தான் படை முழுக்க வெள்ளைக்காரனோட சண்டை போட்டான். நீங்க வந்திய!''

''ஒங்க தாத்த காலத்ல இருந்து எத்தனையோ திருப்பம் வெள்ளக்காரர் பயந்து ஓட ஓட வெறட்டி அடிச்சிருக்கோம். செஞ்சிக்கோட்டையில என்ன ஆச்சு? கிட்னப்ப நாய்க்கரு திருச்சிக்கு ஓடலியா? நவாப்பெ ஒங்க அப்பா தொரத்தி அடிக்கலியா? ஆனா என்ன ஆச்சு? மிந்தி தெலுங்கு நாயக்கராளுக்கள் கூண்டோட கைலாசம் போக வெச்சுட்டான் வெள்ளக்காரன்! இல்லியா?''

''நாம ஒண்ணா இருந்தா வெள்ளக்காரன் மட்டுமில்ல யாரும் நம்மை அசைக்க முடியாது ஆதிரியாரே! நாம் ஆசைப்பட்டாலும் படாட்டிலும் தஞ்சாவூர்ல சண்டை வருது! எல்லா முஸ்தீபும் செஞ்சாச்சு! ஒரு நாள் நாம எல்லாரும் ஒண்ணா சேந்து சென்னப் பட்டணத்தையே கொளுத்தி எறியணும். அது ஒண்ணும் நடக்க முடியாதது இல்லெ. தெக்குத்தி மறவனுக மட்டும் ஒண்ணா சேந்தாக்கூடபோதும் சதாராவில் இருந்து மராட்டிய படையும் வந்துட்டா - 'விஜயிபவ!' '' என்றார் மாட்கோல்கர். ஆனாலும் குரலில் ஒரு தளர்ச்சி!

''கள்ளன் பெருமை பேசினது போதும் மழவராயா. எல்லாரையும் ஒண்ணுகூட்டி தயார் ஆவுங்க. எப்பவும் சண்டையிட வரலாம். நம்ம விளைச்சல் எல்லாம் போகுது. நாம வளத்த எல்லாம் அந்த வெள்ளைக்காரனுக பிரிச்சு எடுத்துக்கிறான். இன்னொரு பக்கம் போர்ச்சுகீசியனுவளும் நவாப்பட்டணத்துல வெள்ளைக்காரனும் கூடிக்கிறான். பொறையாறு வெள்ளப்பட்டணமா போச்சு. இனிமே எதுவும் நடக்கலாம்! கபர்தார்! ரெடி

ஆகுங்க! தஞ்சாவூர்ல அமைதியா இனிமே வாழவிடமாட்டான் நவாபும் துரானியனும். கள்ளனுக ஒண்ணு சேந்தா மூணுலக்ஷம் துருப்புகள் தயாராய்டும்! கல்கத்தா எகிறிப் போகும்!''

மன்னர் கண்கள் தீ உமிழ்ந்தன. கள்ளர் பெருமூச்சுடன் வேல்கம்பின் சுளுந்தை பரிசீலித்தபடியே ஆதிரியார் பேசலானார். பேச்சுதான் அங்கே மிச்சமாய் இருந்தது.

''கள்ளன் ஒண்ணுசேந்தா!?...'' கல கலவென்று சிரித்தார் மழவராயர். திடுக்கிட்டுத் திரும்பினார் மஹாராஜா! கள்ளன் என்னைக்கி ஒண்ணு சேந்தான்? ராமநாதபுரம் சாலையில் ஏராளமான பந்தயங்களுடன் வரிசை வரிசையாக தஞ்சை நோக்கி ஏதோ கூலிப்படை! குதிரைகள் பாய்ந்து முன்னேறுகின்றன.

ஹேஹேய்! என்ற குரல் எழும்பியதும் சொல்லி வைத்ததுபோல் நூற்றுக்கணக்கில் முந்திரி மரங்கள் மேல் எரிந்து கொண்டிருந்த சுளுந்துகள் பளிச்சென்று மண்ணில் புதைந்து அணைந்து இருட்டு சூழ்ந்தது. புகைந்தது. ஆமாம்! ரீஜண்டு ஹட்டில் ஸ்ட்டனுடைய எச்சரிக்கையின் பேரில் தஞ்சைக்கு விரையும் படை அதுவும் கூலிக்கள்ளன் படைதானே! யாரும் மூச்சு பறியாமல் அடங்கி இருளில் புதைந்திருந்தார்கள். சாலையில் பீரங்கி வண்டிகளின் கரகரத்த இழுவை ஓசை கிலியுண்டாக்கிய படி புளிய மரவண்டிகளின் பேரோசை. மறவர் படைகளின் சக்தி வேல் வெற்றி வேல் குரவையும் எதிரொலித்தபோது இருளும் நடுங்கியது.

*

நடு இரவின் இரண்டாம் ஜாமம்! தஞ்சாவூர் கோட்டை அகழிக்கு கிழக்கே வெகு தூரத்தில் டிக்கன் ஹவ்ஸ் கட்டிடத்தில் மெழுகுவர்த்திகளின் ஒளியில் இருளும் சிவந்ததுபோல சிலிர்த்தது. அமர்சிங்கின் கொத்தவால்களின் குதிரைப்படையுடன் சாரட்டு பதினாறு குதிரைகளும் முன்னால் தூண்களின் ஊடே பாய்ந்து புழுதி எழுப்பினபடி நின்று குளம்பால் தரையைக் கிளறியபடி கனைத்தன.

'டிக்கன் ஹவ்ஸ்' புராதனமான கட்டிடம். இரவின் பயங்கரத்தில் அலட்சியமாய் தஞ்சாவூரில் விதி நிமிர்ந்து நிற்பதான காம்பீர்யத்துடன் கடைசல் பிடித்த எத்தியோப்பிய கருங்காலித் தூண்களின் பருமையும் பளபளப்பும் யானை நிமிர்ந்து நிற்பதான வலுவை காட்டும் அற்புதமான முகப்புக் கட்டிட வாசல். மணிஜாடிகளில் பருமனான மெழுகுவர்த்திகளின் அற்புதமான வெளிச்சம்!

வேகமாக கதவுகளைத் திறந்து விட்டார் மாட்கோல்கர் பேஷ்வா.

பாய்ந்து உள்ளே போனார் மஹாராஜா அமர்சிங்கு! வாயிலில் காத்து நின்ற நீண்ட துப்பாக்கிகள் அவரைக் குறிபார்த்ததைப் பார்த்த மஹாராஜா லேசாக சிரித்தபடி அச்சா! என்று பெருமிதமாகத்தான் உள்ளே கவலைப்படாமல் போனார்.

டிக்கன் ஹவ்ஸ் துறவி சாமியார் இடம்தான்! இந்த நாட்டுக்கு சத்யமான தெய்வத்தையும் கிறிஸ்துவின் தன்னலமற்ற சேவையையும் நிரூபிப்பதற்கு கோழி கூவு முன்பே விடிந்த விடியலாய் வந்த ஃபாதர் ப்ரெட்ரிக் ஸ்வார்ஸ் தங்கியிருக்கும் தெய்வீக மடம் டிக்கன் ஹவுஸ்-உள்ளே ஒரு சாப்பல்! வானளாவ எழும்பிய சிலுவை மடம். கடைசல் பிடித்த தூண்கள் அங்கும் கரும் ஒளி சிந்தின.

நீண்ட வெண்ணிற பருத்தித்துணி மராட்டிய பாணியில் தலைக்குமேல் பந்தல் போல் விரிந்து காற்றில் உப்பலாடியது. அகழ்ந்த அமைதி! ''யாரையும் காணோம் பேஷ்வா! உள்ளே பாருங்க!''

நீண்ட வெண் அங்கிகளும் கேஸக்கும் தரித்த நான்கு பேர் கையில் உயர்ந்து நீண்ட மணிஜாடியில் எரியும் மெழுகுவர்த்தி தீபங்களோடு வந்து அந்த அறையின் தூண்களில் தொங்கிய ராஜகுண்டு ஜாடிகளில் அடுக்கிய மெழுகுவர்த்திகளை நீண்ட குழல் திரிகுப்பி விளக்கின் மூலம் ஏற்றி ஒளிமயம் ஆக்கினார்கள்.

பெரிய வாசல் கதவு திறந்தது. நீண்ட வெண்பறவை ஒத்த அங்கியும் சர்பளீஸ் சுழல மிருதுவாக நடந்து வந்தார் ஃபாதர் ஸிஎப்ஃஸ்வாட்ஸ் துறவியார்! ''வாருங்கள் யுவர்ஹைனஸ் மஹாராஜா'' என்றார் கம்பீரமாக. சிறிய உருவம் நீண்ட தலை முடி முதுகில் புரண்டது. நீலநிறக் கண்கள் அதிலும் ஒரு வஞ்சமும் கோபமும் இனிமையாக வெளிப்படுவதை அமர்சிங் உணர்ந்தார்!

''ஆவோஜி ஸ்வாமிஜி! உங்களைப் பார்க்கத்தான் நான் வந்தேன்'' என்றார் மஹாராஜா அமர்சிங்கு.

மேலே இருந்த பங்கா நீண்டு சுழன்றது காற்று தென்றலாய் வீசியது. பங்காபோடும் சிப்பாய்கள் அறைக்கு வெளியே காலால் மிதித்துச் சுழற்றினார்கள். காற்றில் விலாமிச்சை வேரின் ஈரச்சுகந்தம்!

''எஸ் மை டியர் கிங்! மே ஐ ரோ வாட் யூ விஷ் யுவர் ஹைனஸ் மஹாராஜா நான் என்ன செய்ய வேண்டும் உங்களுக்காக!'' என்றார் ஸ்வாட்ஸ் பாதிரியார்.

லேசான எக்களிப்பும் வஞ்சமும் அவர் கண்களில் நிழலிடுவதை உணர்ந்தவர் வேறு யாரும் அங்கில்லை.

''டோண்ட் ப்ளே லோ டிரிக்ஸ் மஹாராஜா! அக்னியில் தஞ்சாவூர் பொசுங்கிக் கொண்டிருக்கிறது தெரியுமா அமர்சிங்? உங்கள் பண்டிதர்கள் ஆட்சியினி முடியாது! ப்ராம்மனோத்தமர்கள் இஷ்டப்பட்டபடி நீங்கள் போட்ட ஆட்டம் முடிவுக்கு வந்து விட்டது அமர்!'' என்றார் இ.எஸ். ஸ்வாட்ஸ் பாதிரியார்.

ஐ நோ ஃபாதர்! போர் மேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கும் வேளை இது. உங்கள் உதவி வேண்டும் ஃபாதர்! பத்து வருஷம் தஞ்சாவூரை தர்மத்தோடு ஆட்சி செய்தாச்சு இப்போ ப்ரிட்டிஷ் கம்பெனி என்னை நீக்கி தூக்கி எறியப்பாக்குது. யூ ஆர் தி கல்ப்ரிட்! எனக்கு எதிரா நீங்க கல்கத்தா சென்னை

ஜார்ஜ் கோட்டையிலும் என்னை நீக்கணும்ன்னு செய்தி குடுத்து நம்ப வெச்சிரிக்கி. ஆனா நான் உங்களை இதுவரைக்கும் நம்பினேன்!''

''தப்பா புரிஞ்சுக்காதிங்க யுவர் ஹைனஸ் மஹாராஜா! ஆறு வயசுப் பய்யனா இருந்த சர்போஜியெ எத்தினி தடவை நீங்களும் உங்க பண்டிதர் கூட்டமும் கொலை செய்யப்பாத்தீங்க? இந்த பத்து வருஷமா உங்கள் ஆட்சி கெடாமல் உங்களோட திரோண் விழுந்துடாமல் சிம்மாசனத்தை காப்பாத்திக் கொடுத்தது நான்தாங்கற விஷயத்தை மறந்தே போறிங்க'' என்றார் ஃபாதர் சி.எப்ஃ ஸ்வாட்ஸ்!

அந்த அறையில் வெளிச்சம் இருந்தாலும் அறையைச் சுற்றிலும் ஏதோ நிழல் உருவங்கள் அசைந்தாடி நகர்வது அமர்சிங்குக்கு சந்தேகாபாஸ்தமாகவே புரிந்தது 'தூரத்தில் பீரங்கி வண்டிகள் வந்து சேரும் சிப்பாய்களின் காவாத்து சப்தம் ஆங்கில ஆணைகள் ''என்னை ஒழிக்க சென்னையிலிருந்து படையா?'' என்றார் மஹாராஜா. ''இல்லை இல்லை யுவர் ஹைன்ஸ். உங்களுக்கு இந்த ஏழைப் பாதிரியாரால் எந்தத் தொல்லையும் இல்லை. ஆனால் வரிசையாக எல்லா இந்திய ராஜாக்களைத் தோற்கடித்து எல்லா ப்ராவின்ஸ்களையும் தங்களுடையதாக்கி கொண்டு வரும் ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் வலுவான ஜெயங்களைப் புரிந்து கொண்டால் தஞ்சாவூர் தப்பும்! நீங்களும் உங்கள் முன்னோர்களும் பிரிட்டிஷ் கம்பனியின் லாயல்ப்ரெண்ட் என்றுதான் கம்பெனி நம்புகிறது. ஆனால் உங்களுடைய பண்டிதர்கள் உங்களை வாழ விட மாட்டார்கள்! வெரிடேஞ்ஜரஸ் பொஸிஷன் யுவர் ஹைனஸ். என்மீது தப்பு எண்ணாதீர்கள். இனிமேல் கம்பெனியை எதிர்த்தால் ஆபத்து. நான் ஒரு சாமியார்! எனக்கு நாடும் பணமும் வேண்டாம்! ஆனா சுபிட்சம் சமாதானம் சமத்துவம் ஒழுங்கு ஆபத்து இல்லாத வாழ்க்கை அவசியம். தஞ்சாவூர் எரிஞ்சு போறதை ஐடோண்ட் அலவ் தபர்ண்!''

''அப்போ என்னெ ஒழிச்சா தஞ்சாவூர் தப்பிச்சுடுமா? தஞ்சாவூர் மட்டும்தான் இன்னும் சுதந்திரமா இருக்கு ஃபாதர்! நீங்க சாமியாராய் இருந்தும் இந்த அரசியல் உங்களுக்கு ஏன் ஃபாதர்! என்னெ காட்டிக்குடுத்து சிம்ஹாசனத்திலிருந்து கீழ இழுத்துத் தள்ளிட நீங்க செய்யிற சதி எனக்குத் தெரியும் ஃபாதர்!''

''நோ நோ ஸர்ட்டன்லி நாட் யுவர் ஹைன்ஸ்! உங்களுக்கு என்னால எந்தத் தீமையும் வராது! உம்மை ஒழிக்கிறதுனால எனக்கு எந்த நன்மையும் இல்லெ. தஞ்சாவூரைச் சுத்திலும் வார். டக்ஸ் அண்ட் முஸ்லீம் பீப்பிகளும் பாச்சலுக்கு தயாராக இருக்காங்க. உங்ககிட்ட என்ன பலம் இருக்காம்? பத்து பதினஞ்சு வருஷமா உங்களை பிரிட்டிஷ் கம்பனி அமைதியாத்தான் இருக்க விட்டிருக்காங்க! மைசூர் திப்புவோடே சேந்து நீரும் உம்ம பண்டிதர்களும் பிரிட்டிஷ் கம்பெனிக்குத் துரோகம் செய்யறீங்கன்னு தெரியாதா? காரைக் காலுக்கும் பாண்டிக்கும் பணஜ்ஜுக்கும் சத்தாராவுக்கும் படைக்கேட்டு நீங்க தூது அனுப்பியிருக்க விஷயம் என்ன பிரிட்டிஷ்காரர்களுக்கு தெரியாதுன்னு நெனைக்கிறீரா மஹாராஜா? நெருப்போடே நீர் விளையாடும் விளையாட்டு

உம்மையே பொசுக்கிடும். என்னால் எந்த தொல்லையும் வராது. உயிருக்கு ஆபத்து இல்லை! நிர்வாகம் தான் மாறும்!'' என்றார் விஷம் கண்களில் நீலம் பறக்க! ஸ்வாட்ஸ் பாதிரியாரின் பேச்சு பயங்கரமாய் எதிரொலி செய்தது பயம்! பரம்பரையில் இல்லாத குணம்! ஆத்திரம் பொங்கியது அமர்சிங்குக்கு. குறுக்கும் நெடுக்குமாய் நடந்தபடி வீரம் விதைத்தான் அஞ்சா நெஞ்சன் அமர்சிங் ''நீர் யார்? மதம் பரப்ப வந்த பாதிரி! ஆனால் செய்ற காரியம் எல்லாம் சதி அரசியல் குழப்பம், உம்மால் தஞ்சாவூர் அழியத்தான் போறது! ஆமாம்.''

''தஞ்சாவூர் மராட்டதேஷ் ஹமாராஹ! இது எங்களோட தேசம்! ஆனா பிரிட்டிஷ் கம்பெனிக்கு யார் அதிகாரம் குடுத்தா? ஹமாரா தேஷ்ஹ! இனிமேல் - சிநேகிதம் உறவு இல்லெ! எனக்கு பயம் இல்லெ ஃபாதர் நீங்க என்னை பதவியிலிருந்து தூக்கலாம்! தஞ்சாவூர்ல இருந்து எடுத்தெறிய முடியாது.''

''ஓ! ஓப்பன் ஃபைட் தானா? அமர்சிங் மஹாராஜா வேண்டாம் வீணா அழிஞ்சுபோக உங்களை நான் விடமாட்டேன். வீணான சதியில சம்பந்தப்படாதிங்க உங்க போக்கு புரிஞ்சா பிரிட்டிஷ் கம்பனி உங்களையும் உங்க பண்டிதர்களையும் விடாது! நல்ல தெரிஞ்சுக்குங்க.''

''சென்ஜார்ஜ் கோட்டையிலிருந்து நீர் அறிவிப்பு தராமலா இராத்திரியோட ராத்திரியா பீரங்கிப்படை வந்திருக்கு! பயமில்லெ! கடைசிவரைக்கும் ஃபாதர், சண்டைபோட்டுதான் சாவேன். பார்ப்போம் ஒரு கை!'' என்று உறுமினார் அமர்சிங்.

அஞ்சாது அசையாது நின்றார் ஸ்வாட்ஸ் பாதிரியார். அவர் அறியாத அரசியலா? போர் மேகங்களுக்கிடையே அவர் சூது விளையாட்டு அமர்சிங்குக்குப் புரிந்தது. அந்த இரவு விடியாத இரவாகவே போகக்கூடாதா? இன்னும் ஒரு சந்திப்பு மட்டும் மீதி! ஸ்வாட்ஸ் பாதிரியாரின் அமைதியான வஞ்சகம் புரிந்தது. ஒரே வீச்சில் ஸ்வாட்ஸ் பாதிரியாரை ஒழித்து விடலாம். நாலரை அடி நீளமான பளபளக்கும் வாள் உதவும், ஆனால் மேலே பங்காவுக்கு மேல் மாடத்தில் இருந்து அமர்சிங்கை குறிப்பார்த்த துப்பாக்கிகளின் நீளம் மூன்றரை அடிதான்!

''தென் விவில் மீட் அஃப்டர் வேட்ஸ் பாதர்'' என்று எழுந்தார் அமர். ''யுவர் ஹைனஸ்! மன்னிச்சுடுங்க! நாளைக்கு நீங்க த்ரோண்ல இருப்பீங்கன்னு தெரியாது. உங்க சதிவேலை எல்லாம் கம்பனிகிட்ட வேண்டாம். யாருக்கும் நீங்க உதவி பண்ணலை! ஜீஸஸ்தான் உங்களைக் காப்பாத்தணும். சண்டைக்கு ஆள்சேக்காதிங்க. ஜாக்ரதையா தப்பிச்சுக்குங்க இனிமேல் பிரிட்டிஷ் கம்பனி உங்கள்ளவிட மாட்டாங்க. பீ எ ஃப்ரெண்ட் ஆப்ஃதெம்! இல்லென்னாக்க''

''ஹோ மைடியர் ஃபாதர்! இந்த நாடு பிரிட்டிஷ் கம்பனியோட ப்ராப்பர்ட்டி இல்லெ. எங்களை ஆடர் செய்ய உங்களுக்கு யோக்யதை கிடையாது. லக்ஷக்கணக்குல பணம் கப்பம் தர்றோம்! எல்லாத்தையும் வாரி அள்ளிகிட்டு போறிங்க! யார் வீட்டு சொத்து? அமார்தேஷ் எங்களோட தஞ்சாவூர் மராட்ட நீங்க என்னைக் காட்டிக் கொடுத்தாச்சு ஃபாதர் பார்ப்போம். ஐ வில் ஃபைட் டில்

டெத்! அடிமையா இனிமே இருக்க மாட்டேன். உங்க உதவி தேவையில்லை! நாளை விடியட்டும். யார் எங்கே எப்படி இருப்போம்னு பாப்பம்'' என்று அலறியபடியே வேகமாய் வெளியேறினான் அமர்சிங் மஹாராஜா!

இருள் அர்த்தம் பொங்க அமைதியாகியது 'புவர் மேன்' என்ற சொல் அமர்சிங்கின் சாரட்டு குதிரைகளின் முதுகில் சவுக்கு சுற்றி சொடேரிட்டது. இருபது குதிரைகளும் காவிரிக் கரை நோக்கிப் பாய்ந்தன. பின்னாலேயே சிப்பாய்களின் ரகசியப் படையும் பாய்ந்து பரிசீலித்தது. வருவதை உணர்ந்த அமர்சிங்கு குதிரைகளின் வேகத்தைத் துரிதப்படுத்தினார். வாயு வேகமாய் கனத்தே பறந்தது போல் அமர்சிங்கின் சாரட்டு இருளை அறுத்துப் பாய்ந்த அதே நேரத்தில்-

தஞ்சாவூர் வல்லம் சாலையில் இருக்கும் ரிஜண்ட் பங்களாவில் நுழைந்த சிப்பாய்கள் ரீஜண்ட் துரை ஹட்டில்ஸ்ஸடன் சாஹிப்பிடம் சென்று திருமழபாடி காவிரிக்கரை ஓரம் புள்ளம்பாடியில் அமர்சிங்கைச் சந்திக்க படையுடன் வந்திருக்கும் திப்புசுல்தானைப் பற்றி செய்தி ரகசியத்தை ஒற்று கொடுத்தனர்.

ஹட்டில்ஸ்டன் கலகலவென்று நகைத்தபடி ''அமர்சிங்கும் அங்கே போய்ச் சேர்ந்தாச்சா? உடனே காவிரி தாண்டு முன்னதாகவே அமர்சிங்கை அரஸ்ட் செய்யுங்கள். நானும் சென்னை பீரங்கி படையுடன் இரவோடு இரவாக வருகிறேன்'' என்று முழக்கமிட்டார்.

''ப்யூகல்'' என்ற அலறல் கேட்டதும் ட்ரம்ப்பெட்டும் ப்யூகிலும் ஆகாய வேகத்துடன் ஒலிக்க வரிசைவரிசையாக துருப்புகள் இருளில் தயாராய் வரிசை வரிசையாக பழையாறை பாதையில் கிளம்பின. பீரங்கி வண்டிகள் திரும்பி சந்தித்தபடி நகர்ந்தன.

பாதிரியார் ஸ்வாட்ஸின் உதவியாளர்கள் ஆறுபேர் குதிரையில் தீப்பந்தங்களுடன் ரீஜண்டுக்கு சல்யூட் செய்தபடி வந்து கபர் கொடுத்தனர். விடியும்போது அமர்சிங் சிறையில் இருப்பான் என்றார். ''ரீஜண்ட் ஃபாதரிடம் சொல்லி விடுங்கள் இன்ஃபாம்!'' என்றார் ரீஜண்ட் துரை. ட்ரம்ஸ் லேசாக ஒலிக்க பயங்கரம் தஞ்சையை நோக்கி திரும்பியது.

*

தார்சா உப்பரிகையில் நின்று வழிமேல் விழி வைத்துப் பார்த்த எதிர்பார்த்த அமர்சிங்குக்குத் தன் காலடியில் பூமி நழுவுவது புரிந்தது. மூன்றாம் ஜாமம் கடைசிவேளை! ஹானோஜ் பண்டிதரும் ராமலிங்கையரும் திருமழபாடி எதிரே இந்நேரம் திப்புசுல்தானிடம் உதவி கேட்டிருப்பார்கள். விடியுமுன்பாக காரைக்கால் வழியே ப்ரெஞ்சு பீரங்கிப் படையும் வந்துவிடும் என்று எதிர்பார்த்தார் அமர்சிங்கு! ரீஜண்ட் ஹட்டில்ஸ்டன் தன்னைத் தேடி பின் தொடர்வது தெரிந்தபின் மாட்கோல்கருடன் சாரட்டு விரைந்து போக வழியிலேயே அமர்சிங்கு இறங்கியது பின்னால் வந்த கூலிப்படையினருக்குத் தெரியவில்லை. தஞ்சை அரண்மனை இருண்டு கிடந்தது. மனைவிகள் அந்தப்புரத்தில் முடங்கிய பயம்! கீழே அரண்மனைப் பூ முகத்தில் அணிவகுத்து நிற்கும் சொற்ப மராட்டியப் படைகள்.

சதாராவிலிருந்து படை அனுப்புவதாக மராட்டிய மன்னர் வாக்கு கொடுத்திருந்தார். புதிய தேவிப்பட்டணத்து ஆட்களும் தயார் நிலைதான். ஆங்கிலப்படையை சிதறடிக்க ஒரு மணிநேரம் போதும். ஆனால்... திப்புவின் படைகள் வருமா உதவிக்கு ஹா! வராதா? வரப்போவதில்லையா?

இருள் விலகாத உப்பரிகையிலிருந்து இருளில் நம்பிக்கையை எதிர்பார்த்து நின்ற அமர்சிங்கை தேடிய ஆங்கில துருப்புகள் மழபாடியில் அலைந்துலைந்த அதே நேரத்தில் அமர்சிங்கை வீழ்த்துவதற்கு சென்ஜார்ஜ் கோட்டை நோக்கி ஸ்வாட்ஸ் பாதிரியாரும் அவரது குதிரை வண்டியும் புறப்பட்டு இருளில் விரைந்தது. தார்சா உப்பரிகை சற்று உயரமானது. துளஜா மஹாராஜா கட்டிய தூபி! அங்கிருந்து சீரங்கம் ரங்கநாதர் விமான கோபுரம் தெரியும். தஞ்சாவூர் இருளில் முணகுவது அமர்சிங்கின் நெஞ்சுக்கு மட்டும் கேட்டது. வெள்ளைப்பறங்கியர் சிதைத்த தஞ்சாவூர் காவேரி கிளை விரித்து கால் ஊன்றி பாயும் வண்டல் விளைச்சல் பூமி விளைந்ததை எல்லாம் கேட்கிறார்கள் வெள்ளைக் கொள்ளைக்காரர்கள்!

ஒரு பக்கம் ஆர்காடு நவாப் படையுடன் பசுமையான விளைச்சலை அள்ளிப் போக சூறையாட வருகிறான். மறுபுறம் பட்டாணி முஸ்லீம்கள்! தரங்கம் பாடியிலிருந்து போர்த்துகீசியர்கள் வியாபாரம் என்ற பெயரில் தஞ்சையை சூறை உடைக்கிறார்கள். மேலே வடக்கு மராட்டியர்கள் மிரட்டி மிரட்டி பணம் வசூலிக்கிறார்கள். இல்லையென்றால் கொள்ளை கொலை கொளுத்தி எரிய விடுகிறார்கள். ஹா! மறுபுறம் சின்ன ஜமீன்களும் தஞ்சாவூரை எரித்து கொள்ளையிடுகின்றன. தடி எடுத்தவன் தண்டல்காரன். தஞ்சை ஒரு விவசாய பூமி.

''மாட்கோல்கர்! அரண்மனை பின்புறமாய் எல்லா ஸ்த்ரீகளையும் வண்டிசாரட்டில் அனுப்பிவிட்டு எல்லவற்றுக்கும் தீ வையுங்கள். என்னைத் தேடாதீர்கள். கோட்டை கீழ்வாசல் மேல் வீதி கதவுகளை மூடி யானைகளை அவிழ்த்து விடுங்கள்!'' என்று அலறியபடி பாய்ந்தார். ''அரண்மனை எரியட்டும், ஜனங்கள் அள்ளிப்போக கஜானாமகலை திறந்துவிட்டுவிடுங்கள். பண்டிதர் எல்லாரையும் தப்பிப்போக விட்டு விடுங்கள்! கபர்தார் நாகோஜிராவ்'' என்றபடியே இருளில் தார்சா மாடியிலிருந்து படியிறங்கி மறைந்தார் அமர்சிங் மஹாராஜா!

கோட்டை மேட்டில் கீழவாசல் அகழிக்கப்பால் ஆர்ச்பால்ட் துரையின் பீரங்கிப் பேரொலி கேட்டது! வெளிச்சப் பந்தம் வானில் பயங்கரமாய்ச் சுழன்றது. தஞ்சை ஜனங்கள் கதவுகளை இறுக அடைத்துக் கொண்டனர். ஆளரவம் அற்ற கரம்பை ரஸ்தாவில் ரத்த வியர்வையில் அமர்சிங்கும் மெய்காவலர்கள் நால்வர் கொத்தவால் பேஷ்வா ஆகியோருடன் காட்டாமணக்குச் செடிகளின் காட்டுக்குள்ளே புகுந்து பட்டுக்கோட்டை சாலை நோக்கிப் போயினர். யாரும் பேச முடியாத துக்கச் செறிவின் ஆத்திரத்தில் இருள்.

முளங்காட்டைத் தாண்டியதும் தீப்பந்தங்கள் சூழ ஆயிரம் குதிரைகளுடன் கூட்டம் சுற்றி வளைத்தது. இருள் பிரியும் வேளை! சில்லிட்ட காற்றில் சுளுந்துப்பந்தத்தின் வேப்பெண்ணை கசப்பு வாடை! வந்தவர்கள் ஆண்களை விட பெண் மக்கள் அதிகம். ஆயிகாமாட்சி குதிரையில் வேல்கம்புடன் முன்னே வந்ததை அமர்சிங்கர் பார்த்தார். மண்ணியார் தலைப்பு நுங்கும் நுரையுமாய் பாய்வது இருட்டிலும் ஈரத்தின் சுகமணம் முந்திரி மரங்களின் கொச்சையும் முந்திரிப் பூக்களில் சொட்டும் தேனீக்களின் இரைச்சலும் மணமுமாய் கிறக்கம் தந்தது.

''அஞ்சமாத்ரம் போவாதிய மஹாராசா! வெள்ளப்பறங்கியனுவ காசா நாடு , நட்டவியங் கோட்டை வரைக்கும் பீரங்கியோட நிக்கிறானுவ! முடியுமா உட்ருவமா? முந்திரிக்காட்டு அக்கினில குளிச்ச சனம்! ராசாவுக்காக கடைசி உயிர் வரைக்கும் காத்து நிப்பமே! இதால் வாங்க''-

''இனிமே என்னா ஆயிம்மா! எல்லாம் அழிஞ்சது. என் பெண்ஜாதிகள் சொந்தக்காரங்க எல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்துல நெருப்புல குதித்துடுவாங்க! திப்பு ஏமாத்திட்டான் புத்திகாட்டிட்டான். சேவல் கூவிடுச்சு. விடியும்போது தஞ்சாவூர் புகைஞ்சு அடங்கும். என்னெ காரா கிருகத்தில் போட ஆர்ச்பால்ட் சேக்ஸன் துரை வருவார். அதுக்கு மிந்தி நான் மஹாதேவப் பட்டணம் வழியே முத்துப்பேட்டை கடற்கரைக்கு ஓடணும்.''

''ராசா! அதெல்லாம் வாண்டாம்! கரமுண்டாரு கோட்டையில பட்றை இருக்கு. மண்ணுக்குள்ள ஊரே பூத்தி வெச்சிருக்கோம். கள்ளன் ஈரக்கொலையில கொண்டுபோயி வெச்சிட்டான்னா... கொலை அறுத்தாலும் உண்மை வெளிய வராது சாமீ! முந்திரிக்காடும் கொய்யா கொண்டித்தோப்பும் வெத்தில வள்ளி கொடிக்காலும் இருக்க வரைக்கும் உங்களெ யாராலும் புடிச்சிற முடியாது. உட்ருவமோ?! வெள்ளப்பறங்கிய தலை துண்டா பறக்கும்'' என்றாள் ஆயிகாமாச்சி.

இருளில் நின்ற காடன் கரமுண்டார் சுருள் முடியும் பாறை மார்புமாக விளக்கெண்ணை மினுங்க உடம்பில் பந்தம் சொருகியபடி நின்றது ஏதாவால் முனிராயன் நேரே வந்தது போல் கடவுள் தோற்றம். அமர்சிங்கு பயந்தார்! குதிரைகள் பறந்தன. காடன் கரமுண்டார் பின்னால் ஏராளமான கள்ளர்கள். அவர்கள் உதவியாக மள்ளர்களும் பள்ளர்களும் ஓடி வர கூட்டம் முந்திரிக் காட்டுக்குள் பவுஞ்சாக பறந்தன.

ஆயி சொன்னது உண்மைதான். ஸ்வாட்ஸ் பாதிரியாரின் ஏரியா அந்த கீழக்கண்ணந்தங்குடியும் மேலக்கண்ணந்தங்குடியும் கள்ளர்கள் முழுமையும் ஸ்வாட்ஸ் பாதிரியாரின் யேசு சபையில் சேர்ந்திருந்தனர். ஆனாலும் ஸ்வாட்ச்சுக்குப் புரியுமோ தெரியாது கள்ளன் கிறிஸ்தவனாலும்கூட கள்ளன்தான்! பின்வாங்கவே மாட்டார்கள் என்பது புரியாதா. காடன்கரமுண்டார் சவுக்கு சொடுக்கிச் சுழற்றினார். பரிசுள் பாய்ந்தன.

பத்து வருஷங்களாகத்தான் ஜனங்களை ஆட்சிக்குள் ஒழுங்குபடுத்தினார் அமர்சிங்கு! இருளில் உப்பரிகையில் சொட்டச் சொட்ட பெரும்

ரகஸ்யங்களைப் புதைத்துக் கொண்ட தஞ்சாவூரின் இருண்டகோலத்தைக் கண் சிவக்க பார்த்து தார்சா மாடியிலிருந்து கிளைப் பாதைகளை உற்றுப் பார்த்தபடி மாடங்களில் நின்று உலவி பொறுமை இழந்தார் அமர்சிங் மஹாராஜா!

கள்ளர்கள் மட்டும்தான் தயாராய் இருக்கிறார்கள். இன்னும் ப்ரெஞ்சுப்படை வரவில்லை. கால்வின்துரை வாக்களித்து எழுதிய கடிதம் மனசில் வந்து பயன் என்ன. நாலாம் ஜாமம் ஆகிவிட்டிருந்தது. ஆங்காங்கே காகங்கள் கூட கரைந்து சிறகடித்தன. இருள் பிரியாத தஞ்சாவூரைக் கொள்ளையிட்ட நவாப்பை எத்தனை முறை துரத்தி அடித்திருக்கிறோம். திப்புசுல்தானின் தந்தையை விரட்டி அடிக்கவில்லையா துளஜாராஜா! எத்தனை முறை இந்த ஆங்கில கும்பினிப்பட்டாளம் தஞ்சைப்படையிடம் சிதறுண்டு தோற்று ஓடியிருக்கிறது. சந்தா சாயபுடன் வந்த போது படை எடுத்துச் சென்று மட்டக்காடுவரை கும்பினிபடையை விரட்டியது யார்? ஆனால் இந்த பதின்மூன்று வருஷங்களில் ஒழுங்காக உலுப்பைகளைக் கொடுத்தார். கப்பம் ஒப்புக்கொண்டு வட்டியும் தீர்வையும் கொடுத்து கும்பனியுடன் சமாதான உடன்படிக்கை செய்து அதுபோல நடக்கவில்லையா? என்றாலும் அமர்சிங்கை ஒழிக்கத் துடிக்கிறது ஆங்கிலேய கும்பினி!

இருள்பிரியாத தஞ்சை அதன் மாயாத நெல்வளம் குறையாத நீர்வளம் எல்லாம் வெள்ளைக் கொள்ளையராலும் துரானியராலும் எப்படி எல்லாம் நாசம் ஆயிற்று. பெண்களைத் தேடித்தேடி கற்பழித்தார்கள். வந்தவன் எல்லாம் வீடு வீடாகப் புகுந்து வேட்டுத்தீர்த்து கொன்றார்கள். கோவில்களைத் துரானிய பட்டாளங்கள் சூறையிட்டன. நாயக்கர் காலத்து தர்மங்கள் யாவும் அடியோடு முடங்கின. சத்திரங்கள் சாவடிகள் எல்லாவற்றையும் கொள்ளையிட்டார்கள். இடுப்பு கௌபீனம் கோமணம் ஒன்று தவிர எல்லாவற்றையும் கொள்ளையிட்டனர். அமர்சிங்கும் துளஜாவும் ராஜ்ய பாரம் ஏற்ற பின்னர்தான் இந்தப் பத்தாண்டுகளாக ஓ! வெள்ளைப் பறங்கியர் கூட அஞ்சி விலகி நிற்க ஹிந்து மராட்டா தஞ்சாவூர் எழுந்து தர்மத்துடன் காத்து நின்றது! பாடசாலைகள் திறக்கப்பட்டன. தர்மசாலைகள் இயங்கின. அமர்சிங்கின் துணிச்சலில் சூறையாட முடியாமல் விரட்டப்பட்ட எதிரிகள் கண்கள் கரிக்க மீண்டும் தஞ்சை செழித்தது.

வெள்ளைத் துருப்புகள் வழக்கம்போல கிறிஸ்தவ மதம் பரப்ப வந்த சாக்கில் அரசியலைப் புரட்டி ஜனங்களை விலைக்கு வாங்கி பிரித்து துரத்தி ஊருக்குள் ரெண்டுபட ஆட்சிக்குள் தலையிட்டு அமர்சிங்கை இறக்கிவிட பத்தாண்டுகளாக நிகழும் சூழ்ச்சிகள் கொஞ்சமா? வீராதி வீரர்களான மானோஜ் பீம்ராவ் சகளே மாட்கோல்கர் போன்ற அரசியல் வீரர்கள் எல்லாரையும் விலைக்கு வாங்கியது கூலிப்பட்டாளக் கும்பினி நாய்கள்! சதி! எங்கும் பதவியிலிருக்கும் ஓநாய்கள் மராட்டியப் படைகள் - இருள் பிரியாத தஞ்சை - விளைநிலத்தைக் கீறி நீரை உறிஞ்சக் காத்திருக்கும் நவாப்! இனி பொறுக்க முடியாது! மன்னார்குடி உதவுமா? தேவிப்பட்டணம் துணைவருமா? நாகப்பட்டணம் துருப்புகளை எதிர்கொள்ள காரை ப்ரெஞ்சுப் படை வருமா?

தஞ்சாவூரின் விதியை யாரும் மாற்றிவிட முடியாது என்று அமர்சிங் சொல்லிக் கொண்டார். 'விஜயீபவ!' என்ற குரல் கேட்டு துணுக்குறாமல் திரும்பிப் பார்த்தார் அமர்சிங்கு! ரத்த வெள்ளத்தில் மூழ்கி எழுந்தே வந்தது போல் நாகோஜிராவ் உருவிய வாளுடன் செய்தி சொன்னார்.

"திருப்பாம்பரம் காட்டில் ப்ரெஞ்சு தளபதி கால்வின் துரையைச் சந்தித்த ஆங்கில தளர்கர்த்தன் மார்க்ஸ்வின் இரவோடு இரவாக ஆயிரம் பகோடா தங்கம் கொடுத்து தஞ்சைக்கு உதவ வரும் போக்கை மாற்றி பீரங்கிப்படையைக் காரைக்காலுக்கு வஞ்சகமாக விற்று விட்டார்கள்!"

"ப்ரெஞ்சுப் படை வராதா?" "ஆமாம் மஹாராஜா இனி புதுக்கோட்டை மன்னரின் உதவியும் வராது. கும்பினிப்படை திருமழைபாடியில் உங்களைத் துரத்தித் திரிவதாக கபர்!" என்றார் இரத்தத்தை வழித்து விட்டபடி நாகோஜிராவ் பண்டிதர்.

"ஹாஹ் ஹாஹ் ஹா! வஹ்! வாஹ்! அப்படிச் சொல்லுங்கள் பண்டிதரே! மராட்டியப் படையும் வராது! என்ன சூது நேர்ந்ததோ சதாராவும் பொய்த்து விட்டது! ஹாஹ்ஹா திப்பு என்ன பணம் கேட்கிறாரோ கொடுத்துதான் தீர வேண்டும். தஞ்சாவூரையே கேட்பான் துரோகி! வா எல்லாம் நாசம்! யாரும் தப்ப முடியாது. ஹிந்து தர்மம் ஒழிந்தது. தஞ்சாவூர் மராட்டாதேவ் அழிகிறது" என்றார்? ஹட்டில் ஸ்டன் துரை!

கார்டன் கரமூண்டரர் அசைந்ததாகத் தெரியவில்லை. கள்ளர்களும்! "துரைகளே! கள்ளனுவதான் ஒங்களுக்கு எப்பவும் படைக்கி ஆளுவ கொண்டாந்து குடுத்துருக்கோம். ஆனா பயப்பட மாட்டோம் சாமி! எங்களுக்கு இந்த நாட்ல எந்த நாடு சொந்தம்? நாங்க வேலை செஞ்சு மண்ணெக் கிளறி வெளவு எடுத்து ஜீவிக்கிறோம். நீங்க சொன்னியளே பாளையப்பட்டு எல்லாம் வுழுந்துடுச்சின்னு அதுக்குக் காரணமே அதான் துரை சாமி! கிறிஸ்தவர்களானோம்ன்னிங்க ரச்சிக்கப்பட்டோம்ன்னிங்க. கிறிஸ்தவனானா துரோகம் செய்யலாமா. அமர்சிங்கு மஹாராசாவெ உட்டுருங்க!" என்றார் மழவராயர்.

புளியடி குளத்தின் சரிவில் கூடிய கோர்ட்டில் நிர்வாகம் ப்ரிட்டிஷ் நீதி பேசலாம். ஆனால் கள்ளர்நாடு! அங்கே வேறு சட்டம் செல்லாது என்பது ஆர்ச்பால்ட் துரைக்குப் பயத்துடன் புரிந்தது. சுட்டுத்தள்ளலாம். பீரங்கி பூத்து நெருப்பு கக்கலாம். ஆனால் உண்மை வராது!

"கரமுண்டார் கர்டன்! அமர்சிங்கு இனிமே என்ன செய்ய முடியும்? பிரிட்டிஷ் ரூல் இனி விடாது. ஸ்வாட்ஸ் பாதர் சர்போஜிக்குத்தான் சிபாரிசும் செய்திருக்கார். இனிமேல் அமர்சிங் ஆளமுடியாது. அதோடயே அமர்சிங் பல துரோகம் பண்ணியிருந்தார்."

"இருக்கலாம் துரைகளே! நெஞ்செலும்பு உடச்சுப்புட்டு எடுத்தாலும் ஒரு கள்ளன் அமர்சிங்கை காட்டிக் கொடுக்க மாட்டோம். ஓஷ்! ஒப்பன் வார்தானா? எல்லா கள்ளன்களும் பீரங்கிக்கு சாவக் குடுக்கப் போறிங்கள். திருநெல்வேலி என்ன ஆச்சு தெரியுமா கார்டன்? புகை புகையா புகைஞ்சு போன

புலித்தேவன். மூடேமியா களக்காட்ல கும்பினியெ எதிர்த்தான். வாசுதேவநல்லூர் நெற்கட்டாஞ் சேவல் கோட்ட தூளாகி உதிர்ந்தது தெரியுமா? வடகரையாளர் தூக்குப்போட்டு செத்து மறவர்பட்டாளம் செதறி ஓடிச்சே புரியுமா? ஊற்றுமலை ஜமீன் காலி? சிவ கங்கை படமாத்தூர் ஜமீன் எல்லாம் என்ன ஆச்சு? பிரிட்டிஷ் பீரங்கிக்கு முன்னால் ப்ரெஞ்சு பீரங்கியே ஒண்ணும் பண்ண முடியலைங்கும்போது அமர்சிங் என்ன பண்ண முடியும் கரமுண்டார்!''

''ஹீஸ் ஹெல்ப்லெஸ். திப்புசுல்தான் திருமழபாடியிலிருந்து ஓடியே ஓடிப்போச்சு! தப்பான துரோகிப் பண்டிதர்கள் அமர்சிங்கை நட்ட நடு ஆற்றில் விட்டுட்டு போயாச்சு. மிச்சம் ராமநாதபுரம் கண்ணந்தக்குடி கள்ளனுகள் மட்டும்தான்! சாகத் தயாராய்ட்டிங்களா?'' என்றார் ஆர்ச்சி பான்ட்துரை! அவர் பின் வாங்கவேயில்லை!

மீண்டும் கேலியான அலறல் சிரிப்பு கரமுண்டார்கிட்டேயிருந்து. ''கரமுண்டானெ பயமுறுத்திரியா தொரை? துப்பாக்கி பீரங்கிவேட்டு எல்லாத்தையும் பாத்து தெக்குத்தி சீமை கள்ளனும் மறவனும் ஒதுங்கிட்டான்னு நெனைக்கிறியா தொரை! ஒங்க படையிலயும் மராட்டியன் படையிலும் போர்ச்சுகீசியப் படையிலியும் கண்ணந்தங்குடி கரமுண்டாரு குடிதான் ஏராளமா சாவத்தயாராகியிருக்கு! துரோகத்துக்கு துணைபோவ முடியாது. சண்டையில சாவம்! காட்டிக்குடுத்து வாழமாட்டோம்! கல்லறையில் போனாலும் கட்டயில போனாலும் கள்ளன் கிட்டயிருந்து துரோகம் வராது!''

''கடைசியா கார்டன்! என்னதான் சொல்லப் போகிறீர்?!'' என்றார் ஹட்டில்ஸ்ட்டன் துரை! மூன்று நீதிபதிகளும் விட்டு விலகுவதாயில்லை. பனைமரம் போல் நெடுக நின்ற கார்டன் கரமுண்டார் சொன்ன சொற்களை முந்திரிக்காட்டின் வடுவாத்தா கோவில் சுவர்கள் எதிரொலித்தன!

''துரைசாமி! தஞ்சாவூர் ஒண்ணுதான் சொதந்தரமா இருந்துகிட்டு இருந்தது. அமர்சிங்கு மஹாராஜாதான் உரிமையா ஆட்சிபண்ண கும்பினிக்காரவங்களும் இந்த பத்து வருஷமாத்தான் ஊரு ஊரா நாடு நாடா மாறிகிட்டு வந்தது. இப்ப நீங்க அமர்சிங் ராசா வேண்டாங்கிறீங்க. அமர்சிங்கு ராசாவெ எங்க அடைக்கலமா விட்டுடணும்! ஒண்ணும் செய்யப்படாது! உயிருக்கு உடலுக்கு சொத்துக்கு எந்த தொந்தரவும் தரக்கூடாது. இதுக்கு சம்மதி தந்து ஒப்புக்கொடுத்து நீங்க கையெழுத்துப் போட்டு உறுதியா தீர்ப்பு சொன்னா அமர்சிங்கு நேரா வருவாரு! இல்லென்னா எத்தனை பிறவி எடுத்தாலும் அமர்சிங்கு மஹாராசாவ நீங்க கள்ளன்வகிட்ட இருந்து கொண்டு போகவே முடியாது'' என்றார் கார்டன்.

தூரத்தில் மண்ணாத்தாகோவிலும் வடுவாத்தா கோவிலும் முந்திரி மரங்கள் இடையே இருள் புலர் காலையில் தெரிந்தன. செம்புழுதி கிளம்பிப் பறந்தக் கள்ளர் கூட்டம் ஏரிக்கரை சுடுகாட்டுக்கு வந்ததும் புழுதிப்புகைக்குள் மறைந்து மீண்டும் இல்லாதாயினர். நடுவூர் ரஸ்தா மண் மேவிக் கிடந்தது. வந்த கள்ளர்கள் எங்கோ மரக்குப்பல்கள் இடையிலும் கரிய உருவங்களாகி மறைந்தனர்! பூமி பிளந்து ஆச்சர்யம் ஏது?! அமர்சிங்குடன் கார்டன்

கரமுண்டார் ஆதிரியார் மழவராயர் கண்டப்பிள்ளை என ஐம்பது தலைக்கட்டு அம்பலக்காரர்களுடன் மறைந்து போயினர். காசாவள நாடு சாலை வெறிச்சிட்டது. யாரையும் காணோம் மறிமாயம் போல காணோம்! யாரும் இல்லை எங்கும்!

*

''வாட் ஹப்பண்ட் மிஸ்டர் கார்டன் கரமுண்டார்! யூ ஆர் எ ட்ரூ கிறிஸ்டியன். கிறிஸ்துவை நம்பி ரட்சிக்கப்பட்டவர். உண்மையை சொல்லுங்க அமர்சிங் எங்கே? வேர் இஸ் அமர்சிங்?'' என்றார் ஹட்டில் ஸ்டன் ரீஜண்ட் துரை!

''இது கோர்ட், ஆப் ஆனர் அமர்சிங்குக்காக் கூடிய கோர்ட்! கரமுண்டார் கோட்டையில்தான் அமர்சிங்கிருக்கிறான் என்று நியூஸ் வந்தாச்சு! டோட்ண்ட் ப்ளே ஃபூலிஷ்ட்ரிக்ஸ். கும்பினிகிட்டெ அமர்சிங்கை ஒப்படச்சுடுங்க கார்டன் காரமுண்டார். யூ ஆர்த ஹெட் மேன் ஆப் தி கள்ளர் கம்யூனிட்டி. அமர்சிங்கும் பிரிட்டிஷ் கம்பனியோட லாயல் ப்ரெண்ட்டுதான்.''

''அவர் திப்புவோட சேர்ந்து சண்டைக்கி ஆள் சேத்ததுதான் தப்பு! இந்த கோர்ட் அமர்சிங்கை விசாரிக்கத்தான் வந்திருக்கு'' என்றார் ஆர்ச் பால்ட் ஸீக்கன்ஸ். அவர் முகம் சிவந்திருந்தது. சுற்றிலும் கள்ளர் தலைக்கெட்டு கூட்டம். யாரும் எதுவும் காட்டாத ஆழ்ந்த இருளமைதி!

கரமுண்டார் கார்டன் அசையாத பனைமரமாய் நின்றார் ஆறடி உயரம்! கண்கள் சிவந்து கள்ளின் புளிச்சை வீசின. கோபத்தில் அடக்கப்பட்ட உதடுகள் துடித்தன. சுற்றிலும் பெண்கள் கூட்டம் வேறு.

''என்ன சொல்றீங்க கார்டன்கரமுண்டாரே! அமர்சிங்கை ஒப்படைக்கிறீங்களா இல்லையா? துரோகம் செய்யத்தானா உங்களுக்குத் தெரியும்?'' என்றார் ஆர்ச் பால்ட்!

கடகடவென்ற பேய்ச்சிரிப்பு கார்டன் கரமுண்டாரின் தொண்டைக்குழியி லிருந்து பேய் அலறலாய் எதிரொலித்தது.

''யார்யாரக் காட்டிக் குடுக்கனும் துரோவி சண்டாளன்வளா கள்ளன்லாம்? அமர்சிங்கு மஹாராசா என்ன தப்பு பண்ணுனார்? தொளசா மஹாராசா அதுக்கு மிந்திய அவங்கப்பன் காலத்துல இருந்து கள்ளன்ல்லாம் மராட்டியர்களுக்கு ஊழியம் செஞ்சோம். யாரையும் காட்டிக்குடுக்கலை கூட்டிக் குடுக்கலை. இப்ப அவரெ தொரத்தித் தொரத்தி வேட்டையாட அவரு பண்ணுன தப்பு என்னா? கள்ளன் கழுத்தை அறுத்தாலும் துரோகம் வெளியவராது துரைசாமி! நானும் கிறிஸ்தவன்தான். ஆனா கள்ளன்! பேச்ச மாறக்கூடாது!'' என்றார் கார்டன் கரமுண்டார்.

கோர்ட் ஆப் ஹானர். துரைகள் பயத்துடன் சுற்றிலும் பார்த்தனர். யாரும் அங்கே அசையவில்லை. அமர்சிங்கை எந்த முறையாலும் பிடிக்க முடியாது என்பது தெரிந்தது. பயமற்ற அச்சமற்ற சாவுக்குத் தயாராகிவிட்ட கரமுண்டார் கூட்டம் உருவிய வேல் கம்புகளுடன் நின்றன.

''நோ நோ! யூ ஆர் மிஸ்டேக்கன் கரமுண்டார். அமர்சிங்கை நாங்கள் ஒண்ணும் செய்ய மாட்டோம்! இது ப்ரிட்டிஷ் கண்ட்ரி ஆகிகிட்டு வருது கரமுண்டார். தெக்குத்தி சீமை பாளையக்காரன் எல்லாம் கம்பனி பிரிட்டிஷ் ரூலுக்குள்ள வந்தாச்சு!''

''வாசுதேவ நல்லூர் புலித்தேவன் என்ன ஆனான். பிரிட்டிஷ் சூப்ரமசியை யாரும் இனிமேல் ஜெயிக்க முடியாது கரமுண்டார். ட்ரைட்டு அண்டர் ஸ்டாண்ட். ஐம்பது பாளையப்பட்டு ஜமீன் எல்லாம் பிரிட்டிஷ் ஆட்சிக்குள்ள பிடிபட்டு ஒடுங்கிப் போச்சு! எங்களை பகைச்சவங்க எல்லாம் காலியாகிட்டாங்க. தஞ்சாவூர் ப்ராவின்ஸ் ஐ பிரிட்டிஷ் பீப்பிள் தான் எடுக்கப் போறாங்க. இனிமே அமர்சிங்கை விடமாட்டாங்க! பிரஞ்சுகாரனோடையும் திப்புவோடேயும் சேந்து பிரிட்டிஷ் ஆட்சிக்கு துரோகம் செய்தால் அமரை என்ன விட்டுடுவாங்களா!''

''பீ இஸ் எ கிறிஸ்டியன் பீப்பிள்! வீ அலவ் அமர்சிங் டு லிவ். ப்ராமிஸ். பட் யு மஸ்ட் அரஸ்ட் ஹிம்! நீ அமர்சிங்கை கைது செய்து ஒப்படைத்தால் நாங்கள் அமர்சிங்கை கோர்ட் ஆப் ஆனர். பிரிட்டிஷ் ஜஸ்டினியன்படி கைதியாக விசாரித்து பின்னர் விட்டுவிடுவோம்!'' என்றார் நீதிபதியாக உட்கார்ந்திருந்த ஆர்ச்சி பால்ட்துரை. மற்ற மூவரும் பயந்தனர். எந்த நேரமும் தடிகள் வலைகள் வீசப்படும் அபாயம் காத்திருந்தது.

வியப்பே ஹவானார்கள் ஒரு கணம் எல்லோரும் அசந்து போக மண்ணாத்தா கோவில் முன் மைதானம் பிளந்தது. புழுதி கடல் அலையென எழுந்தது. மூங்கில் கழிகள் சிதறிப் பறக்க பூமி திறந்து பட்டறை வழிவிட்டதை விழிபிதுங்க ஹட்டில் ஸ்ட்டன் சாஹிப் துரையும், ஆர்ச்சிபால்டுதுரையும் வெள்ளைச்சிப்பாய்கள் கூலிப்படை அஞ்சி விலகிஓட கறகறவென பட்டறை திறந்தது. பூமிக்குள்ளிருந்து குதிரை பாய்ந்து வெளியே - அமர்சிங்கு ராஜா பிரசன்னம் ஆனார்! தீப்பந்தங்கள்! ஜோதி விடுத்தன. இந்த உலகம்தானா இது என்று துரை மகனார்கள் அஞ்சி விழுந்தனர்.

''இதோ வந்துவிட்டேன் யுவர் ஹைனஸ். நீங்கள் கைது செய்யப்படுகிறீர்கள்'' என்று குரல் கேட்டதும் வேல் கம்புகள் நிமிர்ந்தன! துப்பாக்கிகள் குறிப்பார்த்தன. ஆர்ச்சிபால்ட்துரை உடனே ஆணையிட்டார்.

''இன் த நேம் ஆப் ப்ரிட்டிஷ் ரூல்! ஐ டிக்ளர் அமர்சிங் ராஜா இஸ் டிஸ்மிஸ் ட்ரேம் ஹில் கிங்ஷிப்! அமர்சிங் ராஜாவாக நீக்கப்படுகிறார். அவர் இனிமேல் தஞ்சையில் இருக்கக் கூடாது. சரபோஜியை கிழக்கிந்திய கும்பினி ராஜாவாக ஏற்று தஞ்சையை ஒப்படைக்கிறது. கள்ளர் கிறிஸ்தவர்கள் வேண்டியபடி அமர்சிங்கை நாளையோ அல்லது இன்னும் இரண்டு பகல் வேளை கடந்ததுமோ மன்னார்குடியிலோ திருவிடை மருதூரிலோ போய் அவர் இருக்க கும்பனி அவரை விட்டு விடுகிறது'' என்றார் நீதிபதி.

''இதற்கு மேல் முரண்டு பிடித்தால் அமர்சிங்கு தப்பினாலோ கள்ளர் கூட்டம் முழுவதும் ஒழிக்கப்படும். பீரங்கிகள் கொண்டு உறந்தைராயன் குடிக்காடுவரை சுட்டுபொசுக்கும். தஞ்சாவூர் எரியும் என்ன சொல்கிறீர்

அமர்சிங்'' என்றார் ஆர்ச்சி பால்ட்துரை.

''நான் என்ன சொல்ல?! என் நாடு நகரம் பிடிபட்டது. நானும் விழுந்தேன். இனி சுதந்திரம் என்பது தஞ்சை மராட்டியருக்கு இல்லை! மராட்டியர்களை வஞ்சித்து தஞ்சை மராட்டிய தேசத்தை பிரிட்டிஷ் அரசாட்சி எடுத்துக்கொள்கிற திருட்டுத்தனத்தை நான் எதிர்க்கிறேன். நான் சாவுக்கு பயப்படவில்லை. இதோ ஐயாயிரம் கள்ளர்கள் என் வசம்தான். போரிட்டு ஜெயிக்க முடியும். ஆனால் யுவர் மஜஸ்ட்டி! நான் இவர்களையும் தஞ்சை மக்களையும் நேசிக்கிறேன். போதும்! என் சுதந்திர தாகம் போதும்! என் நண்பர்களின் வஞ்சகம் போதும். மராட்டா தஞ்சாவூர் அழிகிறது. சர்போஜி வந்தால் மட்டும் விட்டு வைக்கப் போகிறதா கிழக்கிந்திய கம்பனி! நிச்சயமாக சரபோஜியும் சாவான்! ஆட்சி இழப்பான்.''

''நடப்பது நடக்கட்டும். என்னோடு தஞ்சையின் சுதந்திரப் போர் முடிய ட்டும். பிரெஞ்சுக்காரர்கள் ஒருபுறமும் இங்கிலீஷ்காரர்கள் ஒரு புறமுமாய் சூறை யாடுங்கள். போர்ச்சுகீசியர்களும் டச்சுடேனிஷ்காரர்களும் ஏற்கனவே தின்று தீர்த்த தஞ்சாவூர் மராட்டா ப்ரதேசத்தில் இனி என்ன இருக்கிறது. பாவம் இந்தக் கள்ள மறவர்கள். இவர்கள் அழிய நான் விடமாட்டேன். ஜெய்பவானீ! நடப்பது நடக்கட்டும். ஜிஸ் தேஷ் தஞ்சாவூர் மராட்டா ஹமாராஹ! இந்த காற்றின் சுதந்திரம் எங்களுடையது. இந்தக் காவிரி எங்கள் வண்டல் பூமித்தாய். இன்று இல்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் சுதந்திர விடுதலை பெறும். அர்ரஸ்ட் மீ! ஐயம் ரெடி டு டை! வாருங்க'' என்று கதறினார் தஞ்சையின் முதலும் கடைசியுமான விடுதலைப்போர் முதல்வன் அமர்சிங் மஹாராஜா

''டோண்ட் பீ ஸில்லி யுவர் ஹைனஸ். தீஸ் பீப்பிள் ஆர் இன்ஸைன்ம். இந்தக் கள்ளர் இனத்தவருக்கு பாவம் எதுவும் தெரியாது. இவர்களை ஒன்று திரட்டவோ தஞ்சாவூர் ஜனங்களைத் திருப்பவோ உம்மால் ஆகாது அமர்! கல்கத்தாவிலிருந்து ஆனர் வந்திருக்கிறது. அமர்சிங் கவலை வேண்டாம்! உங்களை கும்பனி ஒன்றும் செய்யாது. சர்போஜிக்கு இடம்விட்டு நீங்கள் விலக வேணும் அவ்வளவுதான். ஒரு தொல்லையும் சண்டையும் உபத்திரவமும் இல்ல மஹாராஜா'' என்றார் ஹட்டில்ஸ்ட்டன்.

எல்லா வேகங்களும் குமுறல்களும் அடங்கிவிட்டன. எல்லார் மனதிலும் கப்பியசோகம் உண்மை புலர்த்தியது.

''ஹயர் ஆஃ ப்ரடர். இனிமேல் சிறியசிறிய ஜமீன்கள் ஒழியும். தஞ்சாவூர் ப்ராவின்ஸ் சுத்தமாய் எழும்பும். கார்டன் கரமுண்டார் விரும்பியது நடந்துவிட்டதா?'' என்றார் மகலீஷ்துரை!

கண் சிவக்க கள்ளர்கள் ஏதும் செய்ய முடியாமல் வாய்பொத்தி நின்றனர். கைது செய்யப்பட்ட அமர்சிங்கு ராஜாவைத் தனிசாராட்டு வண்டியில் ஏற்றினார்கள். ட்ரம்கள் ஒலித்தன. ப்யூகல் அலறியது. ட்ரம்பெட் முரலமுரல வாத்தியபந்தா தொடங்கி முன்னேறியது.

ஒப்பந்தபடி இதோ பத்திரம் என்று தீர்ப்பைக் கையெழுத்திட்டு நீட்டினார்

ஆர்ச்சிபால்ட் கார்டன் கரமுண்டாரிடம்! அசையாத மலை ஒன்று நகர்ந்ததுபோல் நகர்ந்தது. தலையில் அறைந்து கொண்டு கதறினார் கார்டன் கரமுண்டார்.

குதிரைகளுடன் கூலிப்படைகள் நகர நகர கள்ளர் குடிப்பெண்கள் குலவை வயலில் கேட்டது. குறவைகள் துள்ளாட்டம் போட்டன. வயல் நண்டுகள் ஓடிச்சுழன்றன.

உலகம் வழக்கம்போல் சுழல ஆரம்பித்தது.

அன்றே அமர்சிங் திருவிடை மருதூரில் சிறை வைக்கப்பட்டடார். வேறு வழியின்றி ரெண்டு நாளில் விடுதலையும் செய்யப்பட்டார். அதிகாரம் இழந்த அமர்சிங்குக்கு உபகாரச் சம்பளம் தர ஆங்கில கும்பனி ஒத்துக் கொண்டு பென்ஷன் கொடுத்தது.

இவ்விதமாக தஞ்சையின் முதல் சுதந்திரப்போர் அனலும் இன்றி குளிரும் இன்றி மக்களும் இன்றி உரிமையும் இன்றி ஓய்ந்தே போனது. தஞ்சாவூர் மராட்டியர்களின் ஆட்சியின் கடைசி சுதந்திரக்கொப்பும் ஒடிந்து விழுந்தது.

அமர்சிங் துறவியானார். மக்கள் மடமையில் வீழ்ந்து ஆங்கில ஆக்கிரமத்துக்குத் தொடர்ந்து செவிசாய்த்து கண்ணிருந்தும் குருடராய் செவியிருந்தும் செவிடராய் இன்பமாய் உண்டு உறங்கி வாழ்ந்தனர்

(சுந்தர சுகன்- ஜுன், 2000)

♥